பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 12வள்ளுவர் ஆண்டு 2028 ஐப்பசி 06 வியாழக்கிழமை (23-10-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 310

# இலங்கையின் அரசியல் நிலை பற்றி டில்லியில் குஜ்ராலுடன் ரணில் பேச்சு

## ஐ. நா. படையை அழைக்கும் சாத்தியம் குறித்துப் பிரஸ்தாபம்

புதுடில்லி, ஒக்ரோபர் 23

**இந்தியாவில் தனிப்பட்ட விஜயம் மேற்கொள்ள இலங்கை எதிர்க்கட்சித் தலைவரும், ஐ. தே. க. தலைவருமான ரணில் விக்கிரமசிங்க புதுடில்லியில் இந்தியப் பிரதமர் குஜ்ரால் உட்பட பல அரசியல் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தி உள்ளார்.**

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக அரசினால் சமர்ப்பிக்கப்படும் தீர்வுத் திட்டம் ஏற்றுக்கொள்ளப்படாவிடில் இலங்கை அரசு ஐ.நா. உதவியை நாடலாம் என்று இந்தச் சந்திப்பின் போது ரணில் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இனப் பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கத்துடன் தயாரிக்கப்பட்ட அரசு தீர்வு யோசனைகள் நாளை இலங்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட இருப்பது தெரிந்ததே.

இலங்கைக்கு அமெரிக்க உதவியுடன் ஐ.நா.படையை அனுப்பக் கூடிய வாய்ப்பு உள்ளது என்றும்—

அமெரிக்காவும் — இலங்கையும் நட்புறவுகளை வளர்த்து வருகின்றன என்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பிராந்திய அலகு என்ற பெயரை பிராந்திய அரசு என மாற்ற வேண்டும்

### தெரிவுக் குழுவின் இறுதிக் கூட்டத்தில் ஈ. பி. டி. பி. யோசனை

கொழும்பு, ஒக். 23

''அரசாங்கம் முன்வைத்துள்ள அதிகாரப் பரவலாக்கலில் பிராந்திய அலகு என்பது பிராந்திய அரசாங்கம் என்று இருக்கவேண்டும்''.

நாடாளுமன்றத் தெரிவுக் குழு இறுதியாக நேற்று முன்தினம் கூடிய போது ஈ. பி. டி. பி. அமைப்பு சமர்ப்பித்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தில் உள்ள யோசனைகளில் இடம்பெற வேண்டிய விடயங்கள்— குறைபாடுகள் — விலா வாரியாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

திட்டத்தில் உள்ள குறைபாடுகள் குறித்து தெரிவித்துள்ள சில விடயங்கள் வருமாறு:

★ தேசிய கீதம் தமிழ் மொழியிலும் அமைய வேண்டும் என்பது அங்கீகரிக்கப்படவில்லை.

★ தேசிய கொடி மாற்றப்படவேண்டும் என்று தெரிவிக்கப்படவில்லை.

★ ஏதேனும் ஒரு நிர்வாக அலகில் வாழும் 12 சதவீத மான்வர்கள் தாம் பேசும் மொழியில் நிர்வாகப் பணியை மேற்கொள்ள வசதி செய்யப்படவில்லை.

★ சமஷ்டி முறையில் ஆட்சி அமையும் என தெரிவிக்கப்படவில்லை.

★ வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ்பேசும் மக்களின் தீர்வாக இந்த அதிகாரப் பரவலாக்கல் அமைய வேண்டுமே தவிர சகல மக்களுக்குமான தீர்வாக அமையத் தேவையில்லை. இந்தியாவின் காஷ்மீரில், கனடாவின் கியூபெக்கில், பின்லாந்தின்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி.யின் யோசனைகளை தெரிவுக்குழு ஏற்கவில்லை

### பொதுச் செயலாளர் கண்டித்து அறிக்கை

கொழும்பு, ஒக். 23

நாடாளுமன்ற தெரிவுக் குழு முன்னிலையில் ஜே. வி. பி. முன்வைத்த யோசனைகள் கருத்தில் கொள்ளப்படவில்லை.

இப்படி அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா நேற்று கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் குற்றஞ் சாட்டினார்.

அரசமைப்பு சீர் திருத்தத்தில் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறை ஒழிக்கப்படவில்லை. சிலதிருத்தங்கள் மூலம் அதிகாரம் குறைக்கப்பட்டுள்ளது.

அதிகார பரவலாக்கல் விடயத்தில் வடக்கு — கிழக்கு வாழ் 52 சதவீத தமிழர்களுடைய பிரச்சினைக்கு மாத்திரமே தீர்வு காண

(8 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவை இலக்கு வைத்து "வெற்றி உறுதி" நடவடிக்கை?

கொழும்பு, ஒக். 23

வவுனியா — கிளிநொச்சி பிரதான பாதையைக் கைப்பற்றுவதற்காக ஆரம்பிக்கப்பட்ட ''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கை தற்போது முல்லைத்தீவு நகரை இலக்கு வைத்து நடத்தப்படுவதாகத் தோன்றுவதாக கொழும்பு செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

வெற்றி உறுதி இராணுவ நடவடிக்கைத் துருப்பினர் முல்லைத்தீவு — மாங்குளம் வீதியை தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்து முல்லைத்தீவை நோக்கி முன் [illegible] முயல்வதாக களத்தகவல்கள் தெரிவிப்பதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேநேரம் — பெரிய மடுவில் இருந்து முன்னேறி கரிப்பட்ட முறிப்பு என்ற இடத்தில் தரித்துள்ள படையினரை விடுதலைப் புலிகள் சுற்றி வளைத்து தனிமைப் படுத்தியுள்ளனர் [illegible] தொடர்புகள் இன்றி உள்ள இந்த படையினருக்கு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ரோந்து சென்ற பொலீஸார் மீது வெல்லாவெளியில் தாக்குதல்

### சப் இன்ஸ்பெக்டர் உட்பட மூவர் காயம்

மட்டக்களப்பு, ஒக். 23

மட்டக்களப்பு வெல்லாவெளியில் ரோந்து சென்ற பொலீஸார் மீது புலிகள் தாக்குதல் நடத்தினர்.

நேற்று இடம் பெற்ற இத்தாக்குதலில் சப்இன்ஸ்பெக்டர் உட்பட 2 பொலீஸார் காயமடைந்து அம்பாறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதே நேரம் வெல்லாவெளி-மண்டூர் வீதியில் இடம்பெற்ற மற்றுமொரு சம்பவத்தில் விடுதலைப்புலிகளின் உள்ளூர் தலைவர் கடாபி சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

விசேட அதிரடிப்படையினருடன் இடம் பெற்ற மோதலில் இவர் கொல்லப்பட்டார் என்றும்— ரி 81, 2 கிரனைட், 4 மகஸீன், 90 ரவைகள், சைனைட் என்பன இவரிடம் இருந்து மீட்கப்பட்டதாகவும் — பாதுகாப்பு தரப்பு தெரிவித்தது. (இ-21)

## கண்ணிவெடியில் பயணிகள் பஸ் சிக்கியது

### கிழக்கில் 18 பேர் காயம்

கொழும்பு, ஒக். 23

களுவாஞ்சிக்குடி பொலீஸ் பிரிவிலுள்ள ஒந்தாச்சிமடம் எனனுமிடத்தில் இடம்பெற்ற கண்ணிவெடிச் சம்பவத்தில் போக்குவரத்துச் சபை பஸ் ஒன்றில் பயணம் செய்த 18 பேர் காயமடைந்தனர்.

அவர்கள் களுவாஞ்சிக்குடி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் நேற்று மாலை விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

காயமடைந்தவர்களில் இருவர் பெண்கள். பலத்த காயத்துக்குள்ளான ஒருவர் மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டுள்ளார். பஸ் சென்று கொண்டிருந்த சமயம் 50 மீற்றர் தூரத்தில் கண்ணி வெடித்தது.

இந்த பஸ் கல்முனையில் இருந்து வாழைச்சேனைக்குச் சென்று கொண்டிருந்த போது இந்தச் சம்பவம் இடம்பெற்றது. (இ-9-21)

## முன்னாள் ரெலோ உறுப்பினர் வவுனியாவில் சுட்டுக் கொலை

### மின்சாரம் நிறுத்தப்பட்டபோது சம்பவம்

வவுனியா, ஒக். 23

வவுனியா ரயில் நிலைய வீதி வைரவப்புளியங்குளம் சந்திக்கு அருகில் இளைஞன் ஒருவர் நேற்று முன்தினம் இரவு 7-50 மணியளவில் மின்சார விநியோகம் நிறுத்தப்பட்ட சமயம் இனந்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

சிவக்கொழுந்து அகிலன் (29 வயது) என்ற இந்த இளைஞன் முன்னர் ரெலோ அமைப்பில் அங்கம் வகித்தார் என்றும் —

தற்சமயம் இராணுவத்தில் புலனாய்வுப் பிரிவில் அவர் பணியாற்றுவதாகவும் — விசாரணைகளில் தெரிவிக்கப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 49 அகதிகளுடன் படையினரிடம் சிக்கிய வள்ளம்

மன்னார், ஒக். 23

மன்னார் கடலில் 49 அகதிகளுடன் சென்ற வள்ளம் ஒன்று நேற்று முன்தினம் நள்ளிரவு இலங்கைக் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது.

வள்ளத்தில் இருந்த அகதிகள் தலைமன்னார் பொலீஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (இ-21)

## கண்டியில் தேடுதல் 8 தமிழர்கள் கைது!

கொழும்பு, ஒக். 23

கண்டி நகரின் பல பகுதிகள் நேற்று படையினரால் சுற்றிவளைக்கப்பட்டுத் தேடுதல் நடத்தப்பட்டது.

தேடுதலின் போது எட்டுத் தமிழர்கள் கைதுசெய்யப்பட்டு மேல் விசாரணைக்காக அழைத்துச்செல்லப்பட்டனர்.

கொழும்பில் கடந்த வாரம் இடம்பெற்ற குண்டு வெடிப்பைத் தொடர்ந்தே தேடுதல் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு பிரதேச செயலகங்களின் கீழ் தென்மராட்சிப் பகுதியைப் பிரிக்குக

## இணைப்புக்குழுக் கூட்டத்தில் கோரிக்கை

வடமராட்சி, ஒக். 23

தென்மராட்சியில் மேலும் ஒரு பிரதேச செயலர் பிரிவை ஏற்படுத்துமாறு யாழ். மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இணைப்புக்குழுவின் தலைவரும், யாழ். மாவட்ட எம். பியுமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சாவகச்சேரி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை இக்கோரிக்கையை விடுத்தார்.

தென்மராட்சிப் பிரதேசத்துக்கென சாவகச்சேரி பிரதேச செயலகம் மட்டுமே தற்போது இருந்து வருகிறது. இச்செயலகப் பிரிவை இரண்டாக தென்மராட்சி கிழக்கு, தென்மராட்சி மேற்கு எனப் பிரித்து புதிதாக உருவாக்கப்படும் பிரதேச செயலகத்தை கொடிகாமத்தில் அமைக்குமாறு ஏற்கனவே பல ஆண்டுகளாக கோரிக்கை விடப்பட்டு வந்தது.

இப்பெரும் பிரதேசத்தில் புதிதாக ஒரு பிரதேச செயலகத்தை நிறுவுவதன் மூலம் இப்பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய கூடுதல் வசதிகள் கிடைப்பதுடன் இப்பிரதேச மக்களுக்கு நிர்வாக ரீதியாக இருந்து வரும் கஷ்டங்களையும் தீர்க்கலாம் என பு. சுந்தரம்பிள்ளை தெரிவித்தார். (ஐ-173)

# ஆரிய திராவிட பாஷாபிவிருத்தி சங்கத்துக்கு ஆஸி. உதவி

## ரூ. 50 ஆயிரம் திரட்டி அன்பளிப்பு

யாழ். ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச்சங்க வளர்ச்சிக்காகவும், அதன் தமிழ்ப் பணிக்காகவும் ஆஸ்திரேலிய தமிழ் அபிமானிகள் 50 ஆயிரம் ரூபாவை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

இந்த அன்பளிப்பு நிதி யாழ். பேராயர் கலாநிதி சு. ஜெபநேசன் அவர்களால் திரட்டப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

இந்நிதியை மேற்படி சங்கத்தின் செயலாளர் கடம்பேஸ்வரன் ஏற்று நிரந்தர வைப்பிலிடுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார்.

மேற்படி சங்கம் நிலையான நூலகத்தையும், கட்டடத்தையும் அமைப்பதற்காக சமூக நிறுவனங்களினதும் புரவலர்கள், தொண்டர்களின் உதவியையும் நாடி நிற்பதாக சங்கத்தின் செயலாளர் தெரிவித்தார். (இ-5)

## ஐ. நா. தின கொண்டாட்டம்

சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலயத்தில் ஐ. நா. தினக் கொண்டாட்டம் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய அதிபர் சு. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும்.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரக யாழ். கள உத்தியோகத்தர் ஜோன் டிக்சன் பிரதம விருந்தினராகவும், உடுவில் பிரதிக் கல்விப்பணிப்பாளர் அ. தற்பரானந்தன் கௌரவ விருந்தினராகவும் பங்குபற்றுவர். (இ-3)


ஈசன் கல்வி நிலையம்
கே.கே.எஸ். வீதி, கோண்டாவில்.

**Day Class**
**Accounting**
**Mr. Balavasan**

பங்குடைமை

ஆரம்பம்: 24 - 10 - 97
வெள்ளி 4-00 p.m.
(50715)



யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி

ஆண்டு 6 அனுமதி - 1998

மேற்படி வகுப்பில் மாணவர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி:
15 - 11 - 1997

(சி/1861) — அதிபர்



தொண்டர் ஆசிரியர் சங்கம்
யாழ். மாவட்டம்
அன்பான வேண்டுகோள்

எமது சங்கத்தில் பதிவு செய்து பின் போட்டிப் பரீட்சைகளின் அடிப்படையில் நிரந்தர நியமனம் பெற்றவர்களும் நேர்முகப் பரீட்சைகளுக்கு அழைக்கப்பட்டிருந்தவர்களும் ஏனைய ஆசிரியர்களின் நன்மை கருதி நேரடியாகவோ அல்லது பிரதிநிதிகள் மூலமாகவோ தமது பெயர்களை எமது அலுவலகத்தில் 23 ஆம், 24 ஆம் திகதிகளில் பதிவு செய்து கொள்ளவும். தொண்டர் ஆசிரியர்களின் நிரந்தர நியமனம் தொடர்பாக பலதரப்பட்ட இறுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதையும் அறியத் தருகின்றோம்.

தலைவர்.

(சி/1860)



31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் மு. வைரமுத்து
மருதங்கேணி கல்விக்கோட்ட
பிரதிக் கல்விப் பணிப்பாளர்
V. செல்வராசா
(கரவெட்டி) அவர்களின்

அன்புத் தந்தையும் சைவகுலத்திலகமுமாகிய மு. வைரமுத்து அவர்கள் அமரத்துவம் அடைந்ததையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபச் செய்தியையும் நினைவஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அவரின் ஆத்மா சாந்தியடைய வேண்டி நாம் தினமும் பூசிக்கின்ற நெல்லண்டை ஸ்ரீ பத்திரகாளி அம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

சுபமஸ்து!

சிவஸ்ரீ. தியாக, சோமாஸ்கந்தராஜக் குருக்கள்
(ஆசிரியர், யா/அம்பன்
அ. மி. த. க. பாடசாலை)
(நெல்லண்டை பத்திரகாளி கோயில் பிரதம குரு)
தும்பளை.
பருத்தித்துறை. (50720)


# தாவடியில் மின்னலுக்கு 2 மாடுகள் பலி

தாவடி தோட்டவெளியில் கடந்த திங்கட்கிழமை மேய்ந்துகொண்டிருந்த இரு காளை மாடுகள் மின்னல் தாக்கி இறந்தன.

அப்பகுதியில் வண்டில் ஒன்றில் இருந்து எரு இறக்கிக் கொண்டிருந்த கதிரவேலு மாணிக்கம் என்பவர் தமது மாடுகளை மேயவிட்டார்.

அச்சமயம் திடீரென மின்னல் அப்பகுதியில் தாக்கியதில் அவர் மயிரிழையில் உயிர் தப்பினார். மாடுகள் அந்த இடத்தில் உயிரிழந்தன. (இ-3)


யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

வெளிவாரிப் பரீட்சைகள் 1993, 1994 ஆம் கல்வியாண்டுகளில் சித்தியடைந்த மாணவர்கள் தமக்குரிய பட்டச்சான்றிதழை எதிர்வரும் 26 - 10 - 1997 (ஞாயிற்றுக்கிழமை) யாழ். பல்கலைக்கழகத்தில் முற்பகல் 10. 00 மணிக்கு நேரில் வந்து பெற்றுக் கொள்ளவும்.

குறிப்பு:- பிற்பகல் 1. 00 மணிக்கு நடைபெற இருந்த இவ்வைபவமே முற்பகல் 10.00 மணிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதனை கவனத்தில் கொள்ளவும்.

பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம்.
(சி/1859)


# சாவகச்சேரி லயன்ஸ் நடத்தும் ஐ.நா. தினப் பொதுக்கூட்டம்

## வெற்றி பெற்றோருக்கு பரிசளிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 23

சாவகச்சேரி லயன்ஸ்கழகம் நடத்தும் ஐ. நா. தினத்தை ஒட்டிய பொதுக்கூட்டம் நாளை பி. ப. 1-30 மணிக்கு மட்டுவில் மகாவித்தியாலயத்தில் லயன் பா. விஜயகுமார் தலைமையில் நடைபெறும்.

தென்மராட்சி கோட்டக் கல்விப்பணிப்பாளர் இ. கணேசன் பிரதம அதிதியாகவும், தென்மராட்சி உதவிக் கல்விப்பணிபாளர் நா. சத்தியநாதன் சிறப்பு அதிதியாகவும் கலந்து கொள்வார்கள்.

ஐ. நா. தினத்தையொட்டி லயன்ஸ்கழகமும், தென்மராட்சி கல்விக் கோட்டமும் இணைந்து நடத்திய கட்டுரை பொது அறிவுப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு பரிசில்களும் இவ்விழாவில் வழங்கப்படும்.

கட்டுரைப்போட்டி முடிவுகள் வருமாறு:-

ஆண்டு 13 1 ஆம் இடம்: செல்வி கை. சிவநங்கை (சாவகச்சேரி இந்துக்கல்லூரி), 2 ஆம்இடம்:- செல்வி க. மைதிலி (வரணி மகாவித்தியாலயம்), 3 ஆம் இடம்:- செல்வி சி. றஞ்சனா (வரணி மகாவித்தியாலயம்)

ஆண்டு 12 1 ஆம் இடம்: செல்வி வே. மயூரதி (சந்திரபுர ஸ்கந்தவரோதய ம. வி) 2ஆம் இடம்:- செல்வன் எம். மைக்கல்நளின் (டிறிபேக் கல்லூரி), 3ஆம் இடம்:- செல்வி சி. தாட்சாயினி (வரணி ம. வி)

ஆண்டு 11 1ஆம் இடம்: செல்வன் பூ. சுப்பிரமணிய சிவா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), 2ஆம் இடம்:- செல்வி ஜி. சோபனா (எழுதுமட்டுவாள் கணேசா வித்) 3ஆம் இடம்:- செல்வன் ந. காந்தரூபன் (விடத்தல்பளை கமலாசனி வித்.)

ஆண்டு 10 1ஆம் இடம்: செல்வி க. பத்மலோஜினி (டிறிபேக் கல்லூரி), 2 ஆம் இடம்:- செல்வி சி. சிவரூபி (கச்சாய் அ. த. க. பா) 3ஆம் இடம்:- செல்வி செ. மிதுநாளினி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

பொது அறிவுப் போட்டி முடிவுகள் வருமாறு:

ஆண்டு 13 — 1 ஆம் இடம் க. அபிராமி (சாவகச்சேரி இந்துக்கல்லூரி), 2ஆம் இடம் இ. ஜெசிந்தா (மீசாலை வீரசிங்கம் ம. வி.), 3ஆம் இடம் கு. நந்தகுமார் (வரணி ம.வி)

ஆண்டு 12 — 1 ஆம் இடம் ஆ. திருக்குமார் (வரணி ம. வி.), 2ஆம் இடம் சி. சிவராசா (வரணி ம. வி.), 3ஆம் இடம் இ. விஜயலதா (மீசாலை வீரசிங்கம் ம. வி.)

ஆண்டு 11 — 1 ஆம் இடம் க. பிரதீபன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), 2ஆம் இடம் சீ. சபேசன் (வீரசிங்கம் ம. வி.), 3ஆம் இடம் க. சஞ்ஜீவன் (இந்துக் கல்லூரி, சாவகச்சேரி).

ஆண்டு 10 — 1 ஆம் இடம் ச. பகீரதன் (வரணி ம. வி.) 2 ஆம் இடம் சி. துஷா (மகளிர் கல்லூரி, சாவகச்சேரி), 3ஆம் இடம் சு. திருவதனி (சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி). (இ-3)

# மின் கம்பம் முறிந்து தொழிலாளி காயம்

நெல்லியடி, ஒக். 23

தேக்கமர மின்கம்பத்தில் ஏறிநின்று திருத்த வேலை செய்துகொண்டிருந்த தொழிலாளி ஒருவர் மின்கம்பம் திடீரென முறிந்தமையால் நிலத்தில் வீழ்ந்து படுகாயமடைந்தார்.

துன்னாலை கோவிற்கடவை பிள்ளையார் ஆலயத்திற்கு அருகில் நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றது.

கரவெட்டி மத்தியைச் சேர்ந்த செ. மனோறஞ்சன் (வயது 40) என்னும் தொழிலாளியே படுகாயமடைந்தார். இவர் மந்திகை மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்டு அங்கிருந்து அம்புலன்ஸ் மூலமாக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (ஐ-109)

# வேம்படி வீதியில் விபத்து பெண் காயம்

யாழ்ப்பாணம், ஒக். 23

யாழ்ப்பாணம், வேம்படி வீதியில் நேற்று இடம்பெற்ற கார், மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒரு பெண் படுகாயமடைந்தார்.

மோட்டார் சைக்கிளில் இருந்து சென்றவரும், சாவகச்சேரியைச் சேர்ந்தவருமான இராசையா சுமதி (வயது 47) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)

# நிறைவுநாள் விழாவும் கண்காட்சியும்

சண்டிலிப்பாய் கோட்டத்தில் அமைந்துள்ள முறைசாராக் கல்விப் பயிற்சி நிலையங்களில் பயிற்சிகளை முடித்துக் கொண்ட மாணவர்கள் நிறைவு நாள் விழா ஒன்றை நடத்தவுள்ளனர்.

நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெற உள்ள இவ் விழாவில் பிரதமவிருந்தினராக யாழ். வலயம் 2 இன் கல்விப் பணிப்பாளர் சி. சிவராசாவும், சிறப்பு விருந்தினர்ாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் என். வேதநாயகம் மற்றும் மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் செ. கேசவராஜன், முறைசாராக் கல்விப் பிரிவு இணைப்பாளர் சி. சிவநேயன், சண்டிலிப்பாய் கோட்ட அபிவிருத்தி உதவியாளர் என். சண்முகராஜா ஆகியோரும் கலந்துகொள்ள உள்ளனர்.

முறைசாராக் கல்விப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் வை. சச்சிதானந்தன் விழாவை ஆரம்பித்து வைக்க, சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெ. இருதயநாதன் கண்காட்சியைத் திறந்து வைப்பார். (இ-9)

# 53 தம்பதிகளுக்கு ஒன்றாக கொடிகாமத்தில் திருமணப்பதிவு!

தென்மராட்சி, ஒக். 23

கொடிகாமம் பாலாவிப் பகுதியைச் சேர்ந்த 53 தம்பதிகளுக்கு சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் திருமணப் பதிவினை இலவசமாக நடத்தி வைத்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட இந்த திருமணப் பதிவு வைபவத்தில் கலந்து கொண்ட 53 தம்பதியினருக்கும் கழக வலயத் தலைவர் லயன். டாக்டர் எஸ்.எஸ். அருளானந்தம் மலர்மாலை அணிவித்து கௌரவித்தார்.

பாலாவிக் கிராமத்தில் பெரும்பாலான திருமணங்கள் பாரம்பரிய முறைப்படி நடத்தப்படுவதால் திருமணப் பதிவு மேற்கொள்ளப்படுவதில்லை.

தென்மராட்சிப் பிரிவு பதிவுகாரர் எஸ். மோகனராசலிங்கம், கொடிகாமம் பிரிவு பதிவுகாரர் எஸ். சுந்தரலிங்கம் ஆகியோர் திருமணப் பதிவினை மேற்கொண்டனர். (ஐ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குப்பி விளக்கினால் தீக்காயம்

யாழ்ப்பாணம், ஒக். 23

இரவு படுத்திருந்த வேளை குப்பி விளக்கு தட்டுண்டு தீப்பற்றியதில் ஒருவர் படுகாயமடைந்தார்.

யாழ்ப்பாணம் ரயில் நிலையப் பகுதியில் கடந்த திங்களன்று இரவு இடம் பெற்ற இச்சம்பவத்தில் சின்னத்துரை குமார் (வயது 25) என்பவரே படுகாயமடைந்தவராவார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-15)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### அமரர் இளையதம்பி வல்லிபுரம் (மணியம்)

மலர்வு: 22 — 12 — 1910

உதிர்வு: 22 — 09 — 1997

அன்பின் பிறப்பிடமாய், பாசத்தின் உறைவிடமாய், பண்பின் சிகரமாய், குடும்ப ஒளி விளக்காய், பாசமுள்ள தலைவனாய் எம்மை வாழவைத்த அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு இன்று 23 - 10 - 97 நடைபெறவுள்ள வீட்டுக் கிருத்திய நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

''காமாட்சி இல்லம்''
அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

(50708)

## ஓராம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் நமசிவாயம் குழந்தைவேலு

[நெசவு மேற்பார்வையாளர்]

பிறப்பு: 1918 - 09 - 03

இறப்பு: 1996 - 10 - 05

திதி: 1997 - 10 - 23

ஆருயிர்த் தெய்வமே! ஆசை அப்பாவே!
மாமாவே! தாத்தா அப்பப்பாவே!
கணக்கு முடித்து காலன் தங்களை அழைத்து விட்டான்.
தெய்வமே! தாங்கள் திருவாய் மலர்ந்து ஒரு வார்த்தை கூட
கூறாமல் போய் விட்டீர்களே!
நெஞ்சம் நெக்கு நெக்காகிறதே அப்பா!

தங்களின் ஆன்மா சாந்திபெற ஆண்டவனை தினமும் வேண்டுகின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கோப்பாய்.

(50673)


# இடர்காலக் கொடுப்பனவு கேட்டு சுகயீன லீவுப் போராட்டம்

அம்பாறை, ஒக். 23

1995 - 1996 ஆம் ஆண்டுகளின் 14 மாதங்களுக்கான இடர்காலக் கொடுப்பனவு வழங்கப்படாததை ஆட்சேபித்து கல்முனைக் கல்வி வலய ஆசிரியர்கள், அதிபர்கள் அனைவரும் எதிர்வரும் 29 ஆம் திகதி புதன்கிழமை சுகயீன லீவில் நிற்க உள்ளனர்.

இதற்கு மட்டக்களப்பு, வவுனியா மாவட்ட ஆசிரியர்கள், அதிபர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பும் கோரப்பட்டிருக்கின்றது.

இதேவேளை யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்து வவுனியாவில் பணியாற்றும் 150 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்களும் சென்ற ஆண்டுகளுக்குரிய 18 மாத இடர்காலக் கொடுப்பனவை வழங்கக் கோரி அன்றைய தினம் கடமையைப் பகிஷ்கரிக்கவுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இக் கொடுப்பனவு வழங்கப்படாதவிடத்து டிசம்பர் மாதம் முதல் நடைமுறைப் படுத்தப்படவிருக்கும் மூன்றாண்டுக் கல்வித் திட்டத்தைத் தாம் பகிஷ்கரிக்கவுள்ளதாக தமிழர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளும் இஸ்லாமிய ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளும் தெரிவித்துள்ளனர். வடக்கு — கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலா சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கான 7 மாதக் கொடுப்பனவு உடன் வழங்கப்படும் என்று அண்மையில் உறுதி அளித்திருந்தார்.

எனினும் அது சம்பந்தமாக நடைமுறையில் ஆக்க பூர்வமான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. இடர் காலக் கொடுப்பனவு ஆசிரியர்களுக்குக் கிடைக்கவில்லை. அதனாலேயே உத்தேச தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டதாக இஸ்லாமிய ஆசிரியர் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-14)

## விஷப் பாம்பை பிடிக்க முயன்றவர் கடிக்கு இலக்கானார்

யாழ்ப்பாணம், ஒக். 23

பாடசாலை மாணவர்களின் பரிசோதனைத் தேவைக்காக, வாயகன்ற போத்தல் ஒன்றில் விஷப் பாம்பு ஒன்றைப் பிடிக்க முயற்சித்தவர் அப்பாம்பினால் கடியுண்டார்.

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அக்கல்லூரியின் ஆய்வுகூட உதவியாளரான — ஆனைக்கோட்டையைச் சேர்ந்த — சின்னத்தம்பி மகேந்திரலிங்கம் (வயது 52) என்பவரே பாம்பினால் கடியுண்டவர் ஆவார்.

இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் (உ-15)

## தடையை நீக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 23

வேலணை செட்டிபுலம் கடற்றொழிலாளர் கடற்றொழில் செய்ய விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குமாறு ஈ.பி.டி.பி அமைப்பின் தீவக உப பொறுப்பாளர் என். லோகன் வேலணை 514 பிரிகேட்டின் அதிகாரி கேணல் ஜெயசுந்தரவிடம் கேட்டுள்ளார்.

வேலணை செட்டிப்புலம் பகுதியில் கடற்றொழில் செய்ய அனுமதிக்காததால் அப்பகுதி மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக ஈ.பி.டி.பி. அமைப்பிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. (உ-3)



## COMPUTER POINT

( COMPUTER TRAINING DIVISION )

REGD. No. J / DS / BR / 63 / 97

**No. 28, St. Patrick's Road, Jaffna.**

புதிய பிரிவுகள் ஆரம்பம்:

**97 - 10 - 27, 97 - 11 - 01**

**BEGINNER'S COMPUTER STUDIES**

**COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE**

( DURATION - 4 MONTHS )

LECTURES By:

**S. R. LOGENDRA [ D. C. A ]**

( Systems Analyst, M. C. S. India )

மேலதிக விவரங்கட்கு தொடர்பு கொள்ளவும்.

— நிர்வாகி

[ 50699 ]


## பருத்தித்துறை, நகராட்சி மன்றம் 1998ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

கீழ்க் குறிப்பிடப்படும் குத்தகைகள் சார்பில் **01-01-98** ஆம் திகதி தொடக்கம் **31-12 98** ஆம் திகதி வரைக்கான காலப்பகுதிக்குரிய கேள்விகள் **11-11-97** ஆம் திகதி நண்பகல் 12-00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் பருத்தித்துறை நகராட்சி மன்ற அலுவலகத்தில் **10-11-97** ஆம் திகதி பிற்பகல் 3-30 மணிவரை கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையின் பிரகாரம் மீளளிக்க முடியாத படிவக் கட்டணமும், மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணமும் பணமாகச் செலுத்துவதன் பேரில் வழங்கப்படும்.

கேள்விப் பத்திரங்கள் இணைப்பிரதிகளில் ''செயலாளர், நகராட்சி மன்றம், பருத்தித்துறை'' என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டுத் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டுப் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும்., அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்பட வேண்டும். இது சம்பந்தமான நிபந்தனைகளையும் மேலதிக விவரங்களையும் இவ்வலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

### அட்டவணை

| குத்தகை விவரம் | ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்புப் பணம் | படிவக் கட்டணம். |
|---|---|---|---|
| 1) மரக்கறிச்சந்தை (கடைகள் நீங்கலாக) | ரூபா 1,52,000 | ரூபா 1,500 | ரூபா 150 |
| 2) மீன் சந்தை | ரூபா 67,900 | ரூபா 1,500 | ரூபா 150 |
| 3) வாகன, வண்டிக்காலை | ரூபா 34.300 | ரூபா 1,500 | ரூபா 150 |
| 4) மிதிவண்டிப் பாதுகாப்பு நிலையம் | ரூபா 40,800 | ரூபா 1,500 | ரூபா 150 |
| 5) மாட்டிறைச்சிக்கடை | ரூபா 401,500 | ரூபா 1,500 | ரூபா 150 |
| 6) ஆட்டிறைச்சிக்கடை | ரூபா 14,500 | ரூபா 1,500 | ரூபா 150 |

நகராட்சி மன்ற அலுவலகம்,
பருத்தித்துறை. 20-10-1997

ந. சோமசுந்தரம்,
செயலாளர்,
நகராட்சி மன்றம், பருத்தித்துறை.

[சி/1846]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# இந்து சமய ஆய்வரங்கை வடக்கிலும் நடத்த கோரிக்கை

இந்து சமய கலாசார அமைச்சினால் நடத்தப்படும் இந்து சமய ஆய்வரங்கு நிகழ்வுகள் எதிர்வரும் ஆண்டுகளில் திருகோணமலையிலோ அல்லது யாழ்ப்பாணத்திலோ நடத்தப்பட வேண்டும்.

சரசாலை இந்து மன்றச் செயலாளர் க. சிவசங்கரநாதன் இந்துசமய கலாசார அமைச்சின் பணிப்பாளருக்கு அனுப்பிய கடிதமொன்றில் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் யுத்தகால அனர்த்தங்களினால் யாழ் குடாநாட்டில் சேதமடைந்த ஆலயங்களுக்கு அரசிடம் நஷ்டஈடு பெற்றுத் தரவேண்டுமெனவும் இக்கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. இம்மாதம் 12 ஆம் 13 ஆம் கதிகளில் கொழும்பில் நடைபெற்ற இந்துசமய ஆய்வரங்குக்கு தமிழக, யாழ்ப்பாண அறிஞர்களை அழைத்து கௌரவித்தமையைபாராட்டியுள்ள இவர் ஆலயங்களில் உயிர்ப்பலியிடும் வழக்கம் மீண்டும் பரவுவதைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டுள்ளார். (இ)

## சிரமதானம்

உலகளாவிய ரீதியில் கொண்டாடப்பட்டு வரும் சர்வதேச லயன்ஸ் சேவைகள் தினத்தை முன்னிட்டு யாழ். லயன்ஸ் கழகத்தினரால், கடந்த 7, 8, 9 ஆகிய மூன்று நாள்களிலும் கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் சிரமதானம் நடத்தப்பட்டது.

இதேவேளை இங்குள்ள பூரணப்படுத்தப்பட்ட விஞ்ஞான ஆய்வு கூடம், பாடசாலை மதில்கள் என்பன செப்பனிடப்பட்டுத் திருத்தி வைக்கப்பட்டன. (இ109)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தென்னம் நாற்றுக்கள்

உடன் நடுகைக்குகந்த நல்ல இன தென்னம் நாற்றுக்கள் செவ்விளை, மாலைதீவு, சாதரணம் குறுகிய காலத்தில் பலன் தரக்கூடியவை விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இ. செல்வரத்தினம், அப்புக்காத்து வளவு, அராலி மத்தி, வட்டுக்கோட்டை.

[50703]

### தவறிவிட்டது

வேலுப்பிள்ளை கிருஸ்ண மூர்த்தி ஆகிய எனது தேசிய, விசேட, உத்தியோக அடையாள அட்டைகள் கவர் ஒன்றுடன் ஏழாலை தோப்புக்கும் மல்லாகத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் அளவெட்டி மல்லாகம் பலநோ. கூட்டுறவுச் சங்க கிளை இல. - 08 இல் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.

[சி/1852]

கடந்த ஞாயிற்றுக்கிழமை 18-10-97இல் தாளையடியிலிருந்து யாழ்ப்பாணம் வந்த பஸ்ஸில் பாவித்த ரிக்கட் புத்தகம் நாவற்குழி பஸ்தரிப்பு நிலையத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ். பஸ்தரிப்பு நிலைய அலுவலகத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

[சி/1854]

பாலசுப்பிரமணியம் சத்தியகாந்தன் என்பவரது 771433472V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை மற்றும் 0906004014 இலக்கமுடைய விசேட அடையாள அட்டை மானிப்பாய் இணுவில் சுன்னாகம் வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். தெஸ்பியன் கல்வி நிலையம், K.K.S. வீதி, இணுவில்.

[50713]

### உடன் விற்பனை

பிறிமா பிறவுண் வெள்ளை 8 நாள் பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. மற்றும் புறோயிலர் குஞ்சுகளும். உடன் தொடர்பு: 'மல்லிகாபதி' சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய்.

[50664]

### சேவை

எமது புத்தக இரவல் கொடுக்கும் சேவையை மீண்டும் ஆரம்பித்துள்ளோம் என்பதை எமது வாசகப்பிரியர்களுக்கு அறியத்தருகின்றோம். ஞானம் புத்தக நிலையம், 635, கே. கே. எஸ் வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

(50635)

---

யாழ். பல்கலைக் கழகம்

**வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு**

வெளிவாரிப் பரீட்சைகள் — **1995/96**

முதற் கலைத்தேர்வு — 1996

முதல் வர்த்தகத்தேர்வு — 1996

மேற்குறிப்பிட்ட பரீட்சைகள் டிசம்பர் மாதமளவில் நடைபெறவுள்ளன. விண்ணப்பப் படிவத்தினைப் பெறவிரும்புவோர் யாழ். பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா 15/- இனைச் செலுத்தியமைக்கான பற்றுச் சீட்டினை எமது அலுவலகத்தில் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக் கொள்ளவும். இவ் விண்ணப்பங்கள் யாவும் 28-11-1997 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**பதிவாளர்,**
யாழ். பல்கலைக்கழகம்

(சி/1843)

---

## BIRTHDAY REMEMBRANCE

**23rd October**



**Swaminathan Balachandran**

(B. Sc. (Cey.) Dip - Ed.
Director, Undergraduate Dept, Retd. Teacher
Jaffna College)

Silent and Sudden
Came your Call,
Without a word,
You left me all alone
But memories
Stay as yesterday.

**Your Everloving wife**
**Grace. B**

32, Palam Road,
Thirunelvely.

(50690)

---

## அந்தியேஷ்டி நாள்
**(25 - 10 - 97) இல்**
## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை



### திருமதி பாறுவதி சின்னத்துரை

பேரவைக் காகப் பெருந் தொண் டாற்றுநல்
பெருந்தகை நாக லிங்கமவர்
வாரப் பாடுடைப் பெரும்பாசம் போயற
மறைந்து போனீரோ அம்மையாரே!

சிவகைங் கர்யப் பணிகள் பலப்பல
தேவஸ் தானங்கள் செய்து நிற்கும்
தவமகன் செய்சிவ புண்ணியம் நின்ஆத்மா
சந்நிதி வேலவர் பதம் சேர்க்க.

சந்நிதியான் ஆச்சிரம
சைவ, கலை, பண்பாட்டுப் பேரவை

ஸ்ரீ செல்வச் சந்நிதி,
தொண்டமானாறு

(சி-1839)

---

## 10-ம் ஆண்டு நினைவலைகள்

அன்னையின் மடியில்: 09 — 08 — 1915



அந்நியர் அழிப்பில்: 23 — 10 — 1987

அமரர்
### வஸ்தியாம்பிள்ளை அன்ரனி குறூஸ்

பப்பா என்று பாசமுடன் நாமழைத்து
பத்தாண்டுகள் பறந்ததப்பா!
தப்பாமல் நீர்புரிந்த தியாகத்தினால்
தரணியில் நாம் வாழுகின்றோம்.
பத்தென்ன பயிற்றுப்பத்தாண்டென்ன — உங்கள்
பசுமையான நினைவலைகள்
நீங்கா எம் நெஞ்சங்களில்.

உங்கள்ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

68, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.

(50712)

---

## முதலாம் வருட ஞாபகம்

மலர்வு: 14 — 09 — 1964



உதிர்வு: 23 — 10 — 1996

### திருமதி அல்பிறட் கசில்டா சுகுணாவதி

''உங்களை சீவியத்தில் நேசித்ததுபோல்
மரணத்திலும் மறவோம்.''

இவரின் ஆன்ம சாந்திக்காக 23 - 10 - 97 வியாழக்கிழமை அன்று காலை 6 மணிக்கு இரங்கற் திருப்பலி புனித தோமையார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்:
கணவன், பிள்ளைகள்,
சகோதரர், உற்றார், உறவினர்,
நண்பர்கள்,

தகவல்:
A. அல்பிறட்,
மணல் ஒழுங்கை,
பருத்தித்துறை.

(50707)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்யாண்சிங் அரசைக் கலைக்க ஜனாதிபதிக்கு நேற்று சிபார்சு!

புதுடில்லி, ஒக். 23

இந்தியாவின் மிகப் பெரிய மாநிலமான உத்தரப் பிரதேசத்தில் கல்யாண் சிங் தலைமையிலான பாரதீய ஜனதாக் கட்சிக் கூட்டணி அரசு கலைக்கப்பட்டு அங்கு ஜனாதிபதி ஆட்சி பிரகடனப்படுத்தப்பட வேண்டும் என்று ஐக்கிய முன்னணி அரசு ஜனாதிபதிக்குப் பரிந்துரை செய்துள்ளது.

உத்தரப் பிரதேச அரசியல் நெருக்கடி நிலை தொடர்பாக ஐக்கிய முன்னணி அமைச்சரவை நேற்று முன் தினம் இரவு முதல் நேற்று அதிகாலைவரை சுமார் 7 மணிநேரமாகக் கூடி விவாதித்தது. கூட்டத்தின் முடிவில் உத்தரப் பிரதேசமாநில அரசைக் கலைத்துவிட்டு அங்கு ஜனாதிபதி ஆட்சியைப் பிரகடனம் செய்யுமாறு பிரதமர் இந்தர்குமார் குஜ்ரால் ஜனாதிபதிக்குப் பரிந்துரை செய்தார்.

கல்யாண்சிங் அரசு கலைக்கப்பட வேண்டும் என்று காங்கிரஸ் உயர் மட்டத்தில் இருந்து பிரதமர் குஜ்ராலுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டு வந்ததாகச் சில அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

பெரும் அமளி துமளிக்கு மத்தியில் உத்தரப் பிரதேச மாநில சட்டப் பேரவையில் நேற்று முன்தினம் நடந்த நம்பிக்கை வாக்கெடுப்பில் கல்யாண்சிங் அரசு 222 வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டியது தெரிந்ததே.

ஏமாற்று அரசியல் மூலம் கல்யாண்சிங் வெற்றியீட்டியதாக காங்கிரஸ் கட்சித் தலைவர் சீதாராம் கேசரி குற்றஞ் சாட்டியிருந்தார்.

ஆறுமாத காலத்துக்கு ஒரு தடவை முதலமைச்சர் பதவியைத் தமக்கிடையே மாற்றிக் கொள்வது என்ற ஒப்பந்தத்தின் அடிப்படையில் கடந்த ஏழு மாத காலத்துக்கு முன் பாரதீய ஜனதாக் கட்சியும், பகுஜன் சமாஜக் கட்சியும் உத்தரப் பிரதேசத்தில் கூட்டணி அரசமைத்தன. அதன்படி முதல் ஆறு மாத காலம் மாயாவதி முதல்வர் பதவி வகித்தார். இரண்டாவது காலாண்டுக்கான முதல்வர் பதவியை கல்யாண்சிங் ஏற்றார். ஆனால் அவர் பதவியேற்று ஒரு மாத காலத்துக்குள் கூட்டணி முறிந்தது. கூட்டணி அரசில் இருந்து பகுஜன் சமாஜக் கட்சி வெளியேறியது. அதனை அடுத்தே உத்தரப் பிரதேச மாநிலத்தில் அரசியல் நெருக்கடி ஏற்பட்டது.

கல்யாண்சிங் ஆட்சி கலைக்கப்பட்டால் நாடளாவிய ரீதியில் போராட்டம் நடத்தப்படும் என்று பாரதீய ஜனதாக் கட்சி தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வீரப்பன் பிடித்து வைத்த 6 கைதிகளும் விடுதலை

சென்னை, ஒக். 23

தான் பிடித்து வைத்திருந்த 6 பணயக் கைதிகளையும் வீரப்பன் நேற்று முன்தினம் விடுவித்துள்ளார்.

இந்தக் கைதிகளை விடுவிப்பதற்கு கர்நாடக தமிழக அரசுகள எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை காலக்கெடு விதித்திருந்தன.

இக் காலக்கெடுவிற்குள் அவர்களை விடுவிக்காவிடில் காட்டுக்குள் இராணுவ நடவடிக்கை தொடங்கப்படும் என்று இரு மாநில அரசுகளும் வீரப்பனுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தன.

காலக்கெடு முடிவடைவதற்கு முன் எதிர்பாராத விதமாக கைதிகளை வீரப்பன் விடுவித்திருப்பது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

காட்டுக்குள் வைத்து விடுவிக்கப்பட்ட இவர்கள் ஆறு பேரும் நீண்ட தூரம் நடந்து சென்று அயலில் உள்ள கிராமம் ஒன்றை பாதுகாப்பாகச் சென்றடைந்தனர் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

தோட்டக் கலைத்துறை விஞ்ஞானி சத்தியப்பிரதமைத்தி மற்றும் வன விலங்குகள் புகைப்படத்துறை நிபுணர்கள் இருவர் உட்பட ஆறு பேர் கடந்த 9 ஆம் திகதி வீரப்பனால் கடத்தப்பட்டது தெரிந்ததே. (ஐ)

# மறுபரிசீலனை செய்ய ஜனாதிபதி உத்தரவு!

புதுடில்லி, ஒக். 23

உத்தரப் பிரதேச மாநிலத்தில் கல்யாண்சிங் அரசைக் கலைத்துவிட்டு அங்கு ஜனாதிபதி ஆட்சியைப் பிரகடனம் செய்யுமாறு ஆளும் ஐக்கிய முன்னணியின் அமைச்சரவை செய்த பரிந்துரையை இந்திய ஜனாதிபதி ஏற்க மறுத்துள்ளார்.

அமைச்சரவையின் முடிவை மறு பரிசீலனை செய்யுமாறு ஜனாதிபதி கே. ஆர். நாராயணன் உத்தரவிட்டுள்ளார். இதனையடுத்து முன்னைய முடிவை மீள்பரிசீலனை செய்வதற்காக ஐக்கிய முன்னணி அமைச்சரவை பிரதமர் ஐ. கே. குஜ்ரால் தலைமையில் மீண்டும் நேற்றுக் காலை கூடியது.

கல்யாண்சிங் அரசைக் கலைக்க ஐக்கிய முன்னணி அரசு முடிவு செய்ததை அடுத்து பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் எல். கே. அத்வானியும், உத்தரப் பிரதேச சட்டப் பேரவைத் தலைவரும் நேற்றுக் காலை ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசினர்.

அதன் பின்னரே முடிவை மீள்பரிசீலனை செய்யுமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்ததாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன. (ஐ)

# போராட்டம் நடந்தப் போவதாக பாரதீய ஜனதா எச்சரிக்கை

புதுடில்லி, ஒக். 23

உத்தரப் பிரதேசத்தில் கல்யாண்சிங் அரசு நீக்கப்பட்டால் தெருக்களில் இறங்கிப் போராடப் போவதாக பாரதீய ஜனதாக் கட்சி எச்சரித்துள்ளது.

பராதிய ஜனதாக் கட்சி அரசை நீக்கி விட்டு ஜனாதிபதி ஆட்சியைப் பிரகடனம் செய்யுமாறு பிரதமர் குஜ்ராலுக்கும், ஐக்கிய முன்னணி அரசுக்கும் காங்கிரஸ் கட்சியும், பகுஜன் சமாஜக் கட்சியும் அழுத்தம் கொடுத்ததாகப் பாரதிய ஜனதாக் கட்சிப் பிரமுகர் ஒருவர் குற்றஞ் சாட்டியுள்ளார். (ஐ)

## உலக அரங்கில்

### குஜ்ராலின் விஜயம் ரத்து

புதுடில்லி, ஒக். 23

உத்தரப் பிரதேச மாநிலத்தில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியை அடுத்து பிரதமர் இந்தர்குமார் குஜ்ராலின் ஐரோப்பிய சுற்றுப்பயணம் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

ஐக்கிய முன்னணி அமைச்சரவைக் கூட்டத்திற்கு தலைமைவகித்து முக்கிய பல முடிவுகளை எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாலேயே குஜ்ரால் புதுடில்லியில் தங்கி இருக்க நேரிட்டுள்ளது

ஜேர்மனி மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு நேற்று மேற்கொள்ளவிருந்த பிரதமரின் பயணம் ரத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

எடின்பரோவில் நடக்கும் கொமன்வெல்த் நாடுகளின் தலைவர்களின் உச்சிமாநாட்டில் கலந்து கொள்வதற்காக மட்டும் குஜ்ரால் இன்று புதுடில்லியில் இருந்து புறப்படுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது (ஐ)

### ஜப்பான் இணக்கம்

ரோக்கியோ, ஒக். 23

ஆள்களுக்கு எதிரான நிலக்கண்ணிகளைத் தடை செய்யும் சர்வதேச உடன்படிக்கையில் ஒப்பமிட ஜப்பான் தயாராகி வருவதாக பிரதமர் ஹஷி மோட்டோ தெரிவித்துள்ளார்.

நிலக்கண்ணித் தடை உடன்படிக்கை தொடர்பாக ஜப்பான் தெரிவித்துள்ள இந்த இணக்கம் இந்த உடன்படிக்கையில் கையொப்பமிட மறுத்து வரும் அதன் நேச நாடான அமெரிக்காவுக்கு ஒரு வித அழுத்தத்தைக் கொடுக்கும் என்று அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

ஜப்பானின் மிக நீளமான கடற்கரைப் பிரதேசத்தைப் பாதுகாக்க நிலக்கண்ணிகள் அவசியம் என ஜப்பானியப் படையினர் வலியுறுத்தி வருகின்ற வேளையிலும் உடன்படிக்கையில் ஒப்பமிடத் தயாராவதாக ஜப்பானிய அரசு தெரிவித்துள்ளது. (ஐ)

## முதலாம் ஆண்டு நினைவுப் பிரார்த்தனை



அமரர்

**திருமிகு பொன்னம்பலம் பாலசிங்கம்**

[ முன்னாள் உரிமையாளர், விமலா ஸ்ரோர்ஸ், 275, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் ]

பிறப்பு: 06-01-1923

இறப்பு: 03-11-1996

திதி: 23-10-97

உழைப்பால் உயர்ந்த உத்தமராய்
உறுதுணையாய் உயர்வு தந்த
எந்தையே - உம்மை நாம்
என்று இனிக் காண்பது?

திருமதி யோகம்மா பாலசிங்கம்,
[ மனைவி ]
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

விநாயகர் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

[சி/1855]

## ஓராண்டின் நினைவலைகள்



**அப்புக்குட்டி பன்னீர்ச்செல்வம்**

அன்னையின் மடியில்: 1955 - 03 - 15

ஆண்டவன் அடியில்: 1996 - 11 - 03

திதி: 23—10—97

''ஆண்டொன்று ஓடிமறைந்தாலும் நெஞ்சை விட்டு நீங்காது ஐயா உன் நினைவலைகள்''

மனைவி: ப. இராஜேஸ்வரி
பிள்ளைகள்: ரஜீபன், ரஜிபரன்.
தந்தை: சி. அப்புக்குட்டி.
சகோதரர்கள்: செல்வராசா (சுவிஸ்). செல்வரத்தினம், செல்வச்சந்திரன், செல்வநாதன் (சுவிஸ்),
சகோதரிகள்: திருமதி உமா தங்கராசா(ஹொலண்ட்) செல்வி சோபனா அப்புக்குட்டி,
மைத்துனிகள்: தி. ஜானகி, செ. ரேவதி, செ. பவானி, செ. மோகனா. செ. சாந்தி (லண்டன்)
மைத்துனர்கள்: அமரர் கு. கிருஸ்ணபிள்ளை, கு. தம்பிராசா, கு. பேரம்பலநாதன், (ஜேர்மனி), க. தங்கராசா (ஹொலண்ட்),

'' உமாபதி '',
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி.

(சி/1856)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி கிழக்கில் பாண் பெற முடியாத நிலை

## பேக்கரிகள் மூடிக் கிடக்கின்றன

தென்மராட்சி, ஒக். 23
வடமராட்சி கிழக்குப் பகுதியைச் சேர்ந்த வல்லிபுரக் குறிச்சி தொடக்கம் மாமுனை வரையிலான பகுதியில் வாழும் மக்களுக்கு தற்போது பாண் கிடைப்பதில்லை.

இப் பகுதியில் பேக்கரிகள் உள்ள போதிலும் அவற்றுக்கு மா வழங்கப்படாததால் கடந்த ஒன்றரை வருடங்களாக அவை மூடப்பட்ட நிலையில் உள்ளன.

இப்பகுதிக்குக் கொண்டு செல்லப்படும் மாவின் அளவும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் பாண் தயாரிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் சாவகச்சேரிக்கு வருகின்ற இப் பகுதி மக்கள் தங்கள் உறவினர்களுக்கு வழங்கவென பாணை அதிக அளவில் வாங்கிச் செல்வதைக் காணமுடிகிறது. (ஐ-117)

### நெற்செய்கை ஆரம்பித்துள்ளதை அடுத்து

## கிராம அலுவலர் பிரிவுகளில் வட்ட விதானைகள் நியமனம்

யாழ். மாவட்டத்தில் நெற்செய்கை ஆரம்பித்திருப்பதை அடுத்து கிராமசேவை அலுவலர் பிரிவுகள் தோறும் வட்ட விதானை நியமனங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு யாழ். அரச அதிபர் பணித்துள்ளார்.

சகல பிரதேச செயலகங்களுக்கும் இது தொடர்பான பணிப்புரை அனுப்பப்பட்டிருக்கிறது.

நெல் விதைப்பு நடைபெறும் பகுதிகளில் கட்டாக்காலி கால்நடைகளைப்பிடிக்க நடவடிக்கை எடுக்குமாறும் பணிக்கப்பட்டுள்ளது. (86)

### குருநகர் மீனவர்கள்

## கடற்றொழில் செய்வதற்கான தூரம் மேலும் விஸ்தரிப்பு

### மூன்றரை கிலோமீற்றர்வரை அனுமதி

குருநகர், ஒக். 23
குருநகர் மீனவர்கள் தொழில் செய்வதற்காக குடாக்கடலில் படையினரால் போடப்பட்டிருந்த கடல் எல்லை 20ஆம் திகதி தொடக்கம் மேலும் இரண்டரை கிலோ மீற்றர் தூரம் வரை விஸ்தரிக்கப்பட்டுள்ளதாககுருநகர் கடற்றொழில்சங்கங்கள் தெரிவித்தன.

இதன் மூலம் யாழ். கோட்டையில் இருந்து குடாக்கடலில் மூன்றரைக் கிலோ மீற்றர் தூரம் வரை இவர்கள் மீன்பிடிக்கலாம்.

அத்துடன்குருநகர் இழுவை இறால் தொழில் செய்பவர்கள் தமது நாளாந்த தொழிலுக்கு காலையில் 4.30 மணிக்குச் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இது ஏனைய தொழிலாளர்கள் தொழிலுக்குச் செல்லும் நேரத்தை விட அரை மணி நேரம் முந்தியதாகும்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை சின்னக்கடையிலுள்ள இராணுவ முகாமில் இராணுவ உயர் மட்டத்துக்கும் குருநகரில் உள்ள மீன்பிடிச் சங்கங்களான குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச்சங்கம், குருநகர் சிறகுவலை அபிவிருத்திச் சங்கம், குருநகர் இழுவை இறால் மடிச்சங்கம், குருநகர் குத்தகையாளர் சங்கம் ஆகியவற்றின் பிரதி நிதிகளுக்குமிடையே நடைபெற்ற கலந்துரையாடலில் இது குறித்து தீர்மானிக்கப்பட்டதாகத் தெரியவந்தது. (இ-51)

### ஆசிரியர்கள் கடமையேற்பு

அண்மையில் யாழ். கல்வி வலயம் இரண்டில் உள்ள பாடசாலைகளுக்கு நியமனம் பெற்றுள்ள 39 தமிழ் மொழி மூல ஆசிரியர்களில் ஐவர் மருதங்கேணி கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் நால்வர் தாளையடி றோ. க. த. க. பாடசாலையிலும், ஒருவர் நாகர் கோயில் அ. மி. த. க. பாடசாலையிலும் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர். (ஐ-ரி)

### பயிற்சிக் கருத்தரங்கு

தென்மராட்சி, ஒக். 23
சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளைச் சேர்ந்த 25 சுகாதாரத் தொண்டர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்குகள் கடந்த திங்கள், செவ்வாய் ஆகிய தினங்களில் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெற்றன. (ஐ-117)

### கோயிலுக்குச் சென்று திரும்பிய

## வயோதிபப் பெண்ணின் சங்கிலியை அறுக்க முயற்சி

யாழ்ப்பாணம், ஒக். 23
கோயிலில் வழிபாடு செய்து விட்டு வெளியே வந்த வயோதிபப் பெண் ஒருவரின் கழுத்தில் இருந்த சங்கிலியை அறுக்க முற்பட்ட திருடன் தனது காரியம் பலிக்காததால் தப்பி ஓடிவிட்டான்.

கோண்டாவில் வேலக்கைப் பிள்ளையார் கோயில் வீதியில் நேற்று முன்தினம் காலை 8.30 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றது.

சங்கிலியை அறுக்க முற்பட்டதும் அந்த வயோதிப மாது கையால் அதை இழுத்துப்பிடித்தவாறு கூக்குரலிட்டார். அவரின் தங்கச் சங்கிலி நான்கு துண்டுகளாகஅறுபட்டது. எனினும் அவை திருடனின் கையில் சிக்கவில்லை.

காரியம் பலிக்காது தப்பி ஓடிய திருடன் வழியில் எதிர்ப்பட்டோரிடம் ''அந்த வயோதிபப் பெண்ணுககு உதவி செய்யுங்கள்'' எனக் கூறி விட்டு தந்திரமாகத் தப்பியுள்ளான். (ஐ)

## இரு மாடுகள் ஒன்றாக மிதி வெடியில் சிக்கின

ஒன்றுடன் ஒன்று இணைத்துக் கட்டப்பட்ட நிலையில் தென்னந் தோட்டத்தில் புல் மேய விடப்பட்டிருந்த இரு மாடுகள் மிதிவெடியில் அகப்பட்டதில் அவை இரண்டுமே கால்களை இழந்த சம்பவம் கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரி, அல்லாரை தம்புதோட்டத்தில் இடம்பெற்றது.

ஒரு மாட்டுக்கு மூன்று கால்களும் மற்ற மாட்டுக்கு இரண்டு கால்களும் முற்றாகச் சிதறின.

இப் பகுதியில் விறகு எடுக்கச் சென்ற பெண்ணொருவர் கடந்த மாதம் மிதிவெடியில் அகப்பட்டு காலை இழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-117)

## கோப்பாயில் பாலம் புனரமைக்கப்பட்டது

வடமராட்சி, ஒக். 23
யாழ்ப்பாணம் — பருத்தித்துறை வீதியில் உள்ள கோப்பாய் பாலம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வாகனப் போக்குவரத்துக்காக அண்மையில் திறந்து விடப்பட்டுள்ளது.

சேதமடைந்திருந்த இப் பாலம் உடைக்கப்பட்டு புதிதாக நிர்மாணிப்பதற்கான வேலைகளை கடந்த ஒரு மாத காலமாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை மேற்கொண்டிருந்தது.

புதிதாக இப்பாலத்தை நிர்மாணிக்கும் பொருட்டு வாகனப் போக்குவரத்துக்கென, அருகில் தற்காலிக பாதை ஒன்று போடப்பட்டிருந்தது.

இப்பாலம் நிர்மாணிக்கப்பட்ட பின்னர் அத் தற்காலிக பாதை மூடப்பட்டது. (ஐ-173)

### வங்கி ஊழியர் சீருடை மாற்றம்

இலங்கை வங்கி பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் சீருடைத் துணியின் நிறம் மாற்றப்பட்டுள்ளது. இவ் வருடத்திற்கான சீருடைத் துணிகள் இலங்கை வங்கித் தலைமை அலுவலகத்தினால் யாழ். மாவட்ட கிளைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இனிமேல் பாதுகாப்பு ஊழியர்களது சீருடை கடும் நீலநிற நீளக் காற்சட்டையும் மெல்லிய நீல நிற சேர்ட்டும் ஆகும். (ஐ-117)

# "றாகிங்" கொடூரத்தினால் சிறுநீரகம் பாதிப்புற்று ஆபத்தான நிலையில் யாழ்ப்பாண மாணவன்

கொழும்பு, ஒக். 23
பேராதனைப் பல்கலைக் கழகத்தில் சிரேஷ்ட மாணவரின் 'றாகிங்' கொடூரத்துக்கு ஆளான யாழ்ப்பாண மாணவன் ஒருவன் மிக ஆபத்தான கட்டத்தில் உயிருக்காகப் போராடுவதாகத் தெரிய வருகின்றது.

யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவனான பிரகாசம் வரப்பிரகாஷ் என்ற மாணவனே இக்கொடூரத்துக்கு ஆளாகியிருக்கிறார்.

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பொறியியல் பீடத்துக்கு அனுமதி பெற்ற இந்த மாணவன் இம்மாத முற்பகுதியில் அங்கு பயிலும் — யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த — சில சிரேஷ்ட மாணவர்களினால் 'றாகிங் கொடூரத்துக்கு உள்ளாக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

கால்களிலும் கைகளிலும் இருந்தவாறே 500 தடவைகள் பதிந்து எழுமாறு (Dips) சிரேஷ்ட மாணவர்கள் பணித்தபோது, அதற்கு மறுப்புத் தெரிவிக்க முடியாத நிலையில், எதிர்க்க முடியாத நிலையில் வரப்பிரகாஷ் அவ்வாறே செய்தார்.

500 தடவைகள் பதிந்து எழும்பியதும் அவர் மூர்ச்சித்து விழுந்தார். அதன் பின்னர் அவருக்கு சிறுநீருடன் இரத்தம் கழிந்தது. இது விடயம் கொழும்பில் உள்ள டாக்டரான தந்தை சிவகுரு வரப்பிரகாஷத்துக்கு அறிவிக்கப்பட்டது.

அவர் மகனைக் கொழும்புக்குக் கூட்டி வந்து முதலில் கொழும்பு தேசிய ஆஸ்பத்திரியில் அனுமதித்தார். வரப்பிரகாஷ் இப்போது நவலோக ஆஸ்பத்திரியின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார்.

அவரது உயிருக்கு என்னாகும் என்பதனைக் காலமே நிர்ணயிக்கும் என்று கூறுமளவிற்கு அவரது உடல்நிலை மோசமடைந்துள்ளது.

[illegible] அம்மாணவனின் சிறுநீரகம் இரண்டும் செயல் இழந்துள்ளதாகவும் — கொழும்பு நவலோக ஆஸ்பத்திரியில் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் அம்மாணவன், செயற்கை சிறுநீரகக் கருவிகளினதும், இருதயத் துடிப்பு ஊக்கிகள் மூலமும் உயிர் வாழ்ந்து கொண்டிருப்பதாகவும் — மாணவனின் உடல் நிலை மிக ஆபத்தாக இருப்பதாகவும் — தெரியவந்துள்ளது.



வரப்பிரகாஷின் தந்தையார் டாக்டர் சிவகுரு பிரகாசமும் தாயார் திருமதி பிரகாஷமும் மகனுக்கு நேர்ந்த கதியை ஜீரணிக்க முடியாத அவலத்தில் குற்றவாளிகள் [illegible] முன் நிறுத்தப்பட வேண்டும் என்பதில் தீவிர[illegible]றனர்.



'றாகிங்' கொடூரத்தில் பாதிக்கப்பட்ட வரப்பிரகாஷ். சென் ஜோன்ஸ் கல்லூரி பரிசளிப்பு விழாவின் போது எடுக்கப்பட்ட படம் இது.

### நாய்களுக்கு தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஒக். 23
யாழ். மாநகரசபைப் பகுதியில் வளர்ப்பு நாய்களுக்கு ஏ. ஆர். வி. தடுப்பு மருந்து போடும் திட்டத்தின் கீழ் இன்று வியாழக்கிழமை காலை 8-30 மணி முதல் 10-30 மணிவரை நல்லூர் தெற்கு சனசமூக நிலையத்திலும்—

காலை 11 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை கல்வியங்காடு காசிப்பிள்ளை வித்தியாலயத்திற்கு அருகில் வைத்தும் தடுப்பூசி போடப்படும்.

நாளை வெள்ளிக்கிழமை காலை 8-30 மணி முதல் 10-30 மணி வரை நரியன் குண்டு சோமசுந்தரம் அவென்யூவிலும்—

காலை 11 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை இராசாவின் தோட்டம் அருள் மாதா சனசமூக நிலையத்தில் வைத்தும் தடுப்பூசி போடப்படும். (ஐ-4)

### கௌரவிப்பு

நெல்லியடி, ஒக். 23
மந்திகை கண்ணகை அம்மன் தேவஸ்தானத்தில்நடந்த நவராத்திரி விழா ஒன்பது தினங்களிலும் சமயச் சொற்பொழிவு நிகழ்த்திய திரு. பத்மநாதன் ஞானேந்திரனுக்கு மேற்படி ஆலய பரிபாலன சபையினர் ''இயலிசை வாருதி'' என்னும் பட்டம் வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர். (ஐ-109)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கொழும்புக் குண்டுத் தாக்குதல் மூலம் புலிகள் சொல்லும் செய்தி என்ன?

## உதயன்

### எலி பிடித்த கதையானது

அரசாங்கத்தின் அதிகாரப் பரவல் திட்டம் நாளை வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. நேற்றுக் கடைசியாகக் கூடிய நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இத்தனைக்கும் தீர்வுத் திட்டம் தெரிவுக் குழுவினால் அங்கீகரிக்கப்படவில்லை. அதிலுள்ள விடயங்கள் குறித்து முழு அளவில் இணக்கம் காணப்படவில்லை. தீர்வுத் திட்டத்துக்கு தமிழ்க் கட்சிகள் உட்பட எதிர்க் கட்சிகள் சமர்ப்பித்த திருத்தங்கள் ஆராயப்படவில்லை. நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கத் தக்க இறுதி வடிவம் பெறவில்லை.

அதனால் அரசாங்கத்தின் (வெறும்) யோசனையாகவே அது நாளை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. நாளை சமர்ப்பிக்கப்படும் ஆவணம் வழமையாக அமைவது போன்று சட்ட வரைபாக (Draft Bill) இருக்காது. ஒரு பருவகால அறிக்கையாகத் (Sessions Paper) தானும் இருக்கமாட்டாது. அரசாங்கத்தின் ஒரு பிரேரணை அறிக்கையாகவே (Statement) சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இவ்வாறு அரசாங்க அறிக்கையாக - அதன் யோசனையாகவே — நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாக இருப்பின் தெரிவுக்குழு தேவைப்பட்டிருக்காது.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் முதலாவது அமர்வு 1996 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஏழாம் திகதி இடம்பெற்றது. கடைசி அமர்வு இம்மாதம் 21 ஆம் திகதி இடம்பெற்றது.

ஆனால் அதிகாரப் பரவல் குறித்த மிக முக்கிய விடயங்களான ஆட்சி முறை, அதிகார அலகு, காணி, நிதி, பாதுகாப்பு விடயங்கள் குறித்துத் தெரிவுக் குழுவில் இணக்கம் காணப்படவில்லை.

இத்தகைய ஒரு நிலை அரசாங்கத்தில் தெரிவுக் குழு முயற்சி தோல்வியில் முடிந்தது என்ற முடிவையே சுட்டி நிற்கிறது. தனது தீர்வுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் நேரடியாகச் சமர்ப்பித்தால் அது நிறைவேறாமல் போகலாம் என்ற அச்சத்தினாலேயே, தெரிவுக்குழு ஒன்றை நியமித்து அதனூடாகச் சபைக்குச் சமர்ப்பிக்க அரசு முயன்றது. அந்த முயற்சியும் அர்த்தமற்றதாகிவிட்டது.

கடந்த இருபது மாதங்கள் ஆக்கபூர்வமற்ற, உருப்படியில்லாத, எதிர்பார்த்த பெறுபேறு இல்லாத ஒரு முயற்சியில் கழிந்திருக்கிறது.

நிலைமையைப் பகுத்தாய்ந்து கொண்டால், அரசின் தீர்வுத் திட்டத்தின் இப்போதைய வடிவம், சிங்களத் தரப்பின் எதிர்ப்பை மட்டுமன்றி தமிழர் தரப்பின் எதிர்ப்பையும் தேடிக் கொண்டுள்ளது!

ஆகையால், இனி அது நாடாளுமன்றத்தில் நிறைவேறுவதற்கான சாத்தியம் இல்லை என்றே கருதவேண்டும், இருபது மாதங்கள் வீணாகியதுதான் மிச்சம். மலையைக் கல்லி எலியைப் பிடித்த கதையாகிவிட்டது.

இனப்பிரச்சினை விவகாரம் தீர்வின்றி இப்படியே இழுபடுவதும், அதன் பொருட்டு நாட்டில் இரத்தம் பீறிடுவதும், அழிவுகள் உண்டாகுவதும் தான் நியதியாகிவிட்டது.

தமிழர்களைப் பொறுத்தளவில், தந்தை செல்வா கூறிய வாக்குப் பிரகாரம், அவர்களை இனிக் கடவுளால் தான் காப்பாற்றமுடியும்.

---

## பி. பி. ஸி. கண்ணோட்டம்

கொழும்பு கோட்டையில் நடந்த குண்டுத் தாக்குதல் பற்றி பி. பி. ஸி. தமிழோசையில் ஒலிபரப்பான கண்ணோட்டம் இது

கடந்த வாரம் தலைநகர் கொழும்பில் பேரழிவு விளைவித்த குண்டுத் தாக்குதலுக்கு விடுதலைப் புலிகளே காரணம் என்று சந்தேகத்துக்கிடமின்றிக் கூறப்படுகிறது. இருப்பினும் இந்தக் குண்டுத் தாக்குதலுக்கும் முந்தைய குண்டுத் தாக்குதல்களுக்கும் இடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் உள்ளன. இது அவர்களது உத்தியில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பதையே காட்டுகின்றது.

கொழும்பில் கடந்த வருடம் விடுதலைப் புலிகள் தாக்குதல்களை நடத்தி பல மாதங்கள் உருண்டோடி விட்டன.

புலிகள் இனிமேல் தலைநகரைத் தாக்க மாட்டார்கள் என்ற ஒரு விதமான — சஞ்சலமான — சிந்தனை நிலவ ஆரம்பித்தது. அதற்குக் காரணம் புலிகளின் சகட்டுமேனித் தாக்குதலால் அப்பாவி மக்கள் கொல்லப்படுவதற்கு சர்வதேச ரீதியாக எழுப்பப்பட்ட கண்டனங்கள் ஆகும்.

கடந்த ஆண்டு ஜனவரியில் மத்திய வங்கிக் கட்டடம் தாக்கப்பட்ட போது நூற்றுக்கு மேற்பட்டோரும் கடந்த ஜூலையில் சனநெரிசலான ரயில் வண்டி ஒன்றில் குண்டுகள் இரண்டு வெடித்த போது 70 பேரும் கொல்லப்பட்டார்கள். எனவே இதே போன்ற மற்றொரு தாக்குதலை புலிகள் நடத்தினால் அவர்களைப் பாதிக்கும் விடயங்கள் ஏராளமானவை என்று ஆய்வாளர்கள் மதிப்பிட்டனர்.

மேற்குலக நாடுகளின் அரசாங்கங்களின் மத்தியில் புலிகள் தேடி வைத்திருந்த சிறிய நற்பெயரும், நல்லெண்ணமும் உட்பட அனைத்துமே வெடித்துச் சிதறிக் கற்களோடும் சிமெந்தோடும் கலந்து காற்றிலே மறைந்துவிடும்.

இந்நிலையில் கடந்த புதன்கிழமை நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் பெரும் ஆச்சரியத்தைஏற்படுத்தியுள்ளது.

அரசாங்கம் முன் கூட்டியே பல எச்சரிக்கைகளை அண்மையில் வெளியிட்டிருந்த போதும் பொதுமக்கள் சற்றுக் கட்டுப்பாடுகள் தளர்ந்தவர்களாக நடந்து கொள்ள ஆரம்பித்தமை தெரிந்தது. பாதுகாப்புக் கூட அவ்வளவாக இருக்கவில்லை என்பதும் இப்போது தெளிவாகி வருகின்றது.

ஓர் அரசாங்கப் பொது விடுமுறை தினத்தில்—

பாதுகாப்பு ஏற்பாடுகள் மிகவும் பலவீனமாகஇருக்கும் நேரத்தை சாதகமாகப் பயன்படுத்த குண்டுதாரிகளால் முடிந்தது. அந்த நேரத்தில் வெடிமருந்து பொருத்தப்பட்ட வண்டி ஒன்றை நகரின் மையப்பகுதிக்கு ஓட்டிச் செல்ல அவர்களால் முடிந்தது.

கடந்த வருடத் தாக்குதல்களில் பாடம் படித்துக் கொண்ட புலிகள் இவ்வாண்டுத் தாக்குதலில் ஏற்படப் போகும் சேதங்களை, அழிவுகளைக் குறைக்க முனைந்திருக்கிறார்கள்.

பொதுமக்களின் உணர்வுகளை இப்போது போதுமான அளவு உணர்ந்து கொண்டு விட்ட புலிகள் தமது போர் அணிச் செயல்களை — உத்திகளை—முற்றாகவே மாற்றிக் கொண்டு விட்டார்கள் என்று ஆய்வாளர் ஒருவர் கூறுகின்றார்.

கடந்த புதன்கிழமை குண்டுத் தாக்குதல் நடைபெற முன்னர் முன் எச்சரிக்கை வழங்கப்பட்டுள்ளதாகவும்—

குண்டு வெடித்த இடத்தில் கண்டெடுக்கப்பட்ட சிறிய கருவி ஒன்றில் ஒலிப்பதிவு செய்யப்பட்ட செய்தியில் அபாய அறிவிப்பு காணப்பட்டதாகவும் அறிக்கைகள் கிடைத்துள்ளன.

தாங்கள் இந்தத் தாக்குதலை நடத்துவதன் நோக்கம் பொதுமக்களைக்காயப்படுத்த அல்ல. கட்டடங்களை நாசம் செய்ய மட்டுந்தான் என்று தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளிலும் அதில் ஒலிப்பதிவு செய்யப்பட்டிருந்ததாம். கடைசியில் நடந்து முடிந்ததும் அதுதான். இச்சம்பவத்தில் பலியான 18 பேரும் குண்டுத் தாக்குதலினால் கொல்லப்படவில்லை, ஆனால் அதனோடு சம்பந்தப்பட்ட சம்பவங்களில் உயிரிழந்தார்கள்.

இந்தத் தாக்குதலுக்கும் முன்னைய தாக்குதல்களுக்கும் இடையே உத்தி அடிப்படையில் சில வேறுபாடுகளும் உள்ளன.

''லேக்ஹவுஸ்'' பத்திரிகை நிறுவனத்துக்குள் துப்பாக்கிதாரிகள் புகுந்தபோது இராணுவ அதிரடிப்படையினர் ''லேக்ஹவுஸ்' பணிமனையை முற்றுகையிட்டார்கள். இதில் உயிரிழந்த இரு துப்பாக்கிதாரர்களும் தமது உடலில் அணிந்திருந்த வெடி மருந்து அளவுகளும் மிகவும் குறைவு. மிகவும் மெல்லியவை.அதாவது அதை அணிந்தவரைமட்டுமே கொல்லக் கூடியவை. பக்கத்திலிருப்பவரையல்ல, இதுமட்டுமல்ல கடந்த வருடம் மத்திய வங்கி மீதான தாக்குதலின் போது லொறிக்குள் வைக்கப்பட்டிருந்த வெடிமருந்தின் அளவுடன் ஒப்பிடும் போது இம்முறை வைக்கப்பட்டிருந்த அளவு மிகவும் குறைவு. இதனால்தான் உலக வர்த்தக வலயம் தனது ''பளபளப்'' பான கண்ணாடிகளைமட்டும் இழந்து நீண்டகால சேதமெதுவும் ஏற்படாமல் நப்பித்துக் கொண்டது.

நம்பிக்கை இழந்து விட்ட புலிகள் ஏழர்க்கத்தனமாக மாறி விட்டார்கள் என்று எல்லோரையும் நம்பவைக்க இலங்கையரசு விரும்புகின்றது. ஆனாலும் கிடைத்த ஆதாரங்களைக் கொண்டு இப்போது பார்க்குமிடத்து— வடக்கில் இராணுவம் நடத்தி வரும் தாக்குதலுக்குப் பதிலடியாக புலிகள் முன் ஒரு போதும் இல்லாத அளவு தந்திரோபாயங்களையும் புத்திக் கூர்மைகளையும் காட்டுவது தெரிகிறது.

போராளிகளின் சிந்தனை யோட்டத்தை அவர்கள் தெரிவு செய்த விடயங்களைக் கொண்டு கவனிக்கலாம்.

நாட்டின் பெரும் பான்மை சிங்கள மக்கள் பௌர்ணமி தினத்தை— பௌத்த விடுமுறை தினத்தை— வீட்டிலே கொண்டாடிக் கொண்டிருக்கும் ஒருநாள் தாக்குதலுக்குத் தெரிவுசெய்யப்பட்டது.

தலைநகரின் மிக அழகான, மிக உயர்ந்த, மிகச் சிறந்த கட்டடம்— இரட்டைக் கோபுரக் கட்டடம்— தாக்குதல் இலக்காகத் தெரிவு செய்யப்பட்டது.

புதிய அரசமைப்புத் திட்டம்— தமிழ் மக்களுக்கு ஆட்சிப்பகிர்வு வழங்கும் திட்டம் —பற்றி மிக நீண்ட காலக் கலந்துரையாடல் முடிவுக்கு வந்து கொண்டிருந்த நேரம் இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

விடுதலைப் புலிகளை ஒரு பயங்கரவாத இயக்கம் என அமெரிக்க அரசாங்கம் முத்திரை குத்தி — பச்சை குத்தி— அறிவித்தல் வெளியிட்ட கட்டத்தில் இத்தாக்குதலுக்கான காலம் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இவை அனைத்தின் மூலமும் புலிகள் தெரிவிக்க விரும்பும் செய்தி அலட்சியம் செய்யக் கூடிய ஒரு செய்தியல்ல.

விடுதலைப் புலிகள் சம்பந்தப்படாமல் ஆட்சிப் பகிர்வை இலங்கை அரசு எப்படி ஏற்படுத்த முடியும்?

குண்டுகளை வெடிக்க வைத்து நாட்டு மக்களின் மனச்சாட்சியைத் தட்டி எழுப்புவதற்குத் தயாரான சிலர் தலைநகருக்குள்ளேயே வாழும் போது இலங்கையில் சமாதானம்ஏற்படமுடியுமா?

''நாங்கள் இன்றும் இங்கே தான் இருக்கின்றோம். நினைத்ததை முடிப்பவர்கள் நாங்கள், நாங்கள் விரும்பும் நேரத்தில் எதனையும் செய்வோம். தமிழர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினையைத் தீர்ப்பது பற்றி அரசுபேசும் போது எங்களை மறந்து விடக் கூடாது.''

இதுவே புலிகள் வலியுறுத்த விரும்பும் செய்தியாக இருக்கலாம். (ஐ-9)

---

## திருமுறை விழா

யாழ்ப்பாணம், ஒக். 23

சங்கானை கல்விக்கோட்ட சைவத்திருமுறை விழாவும் சைவநெறித் தொண்டு படு நிகழ்ச்சிப் பரிசளிப்பு வைபவமும் வட்டு.திருஞானசம்பந்த வித்தியாசாலை ஆரம்பப் பிரிவு மண்டபத்தில் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு சங்கானைக் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஆ.வ. கணேசலிங்கம் தலைமையில் நடைபெறும்.

விழாவில் வட்டு.திருஞான சம்பந்த வித்தியாசாலை அதிபர் வி. சிவஞானபோதன் வரவேற்புரை நிகழ்த்துவார். நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் அருளாசியுரையும், இந்துமாமன்றம் பேரவைத் தலைவர் அருட்கவி சீ. விநாசித்தம்பி வாழ்த்துரையும் வழங்குவர்.

யாழ். வலயம்—2 கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா, உடுவில் பிரதேச செயலர் சோ. மகாலிங்கம், சங்கானை பிரதேச செயலர் கா. சந்திரராசா, யாழ். வலயம்—2 பிரதிக் கல்விப்பணிப்பாளர் சு. கணபதிப்பிள்ளை, யாழ். வலயம்—01 பிரதிக் கல்விப் பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன், உடுவில் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் அ. தற்பரானந்தன், இளவாலை மெய்கண்டான் ம.வி அதிபர் சைவப்புலவர் இ. செல்லத்துரை, ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் ஆறு. திருமுருகன் ஆகியோர் விழாவில் சிறப்புரை ஆற்றுவர்.

மாணவர்களின் பண்ணிசை புராணபடனம், கதாப்பிரசங்கம் என்பனவும் இடம் பெறும். (ஐ-5)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக். 23

கோப்பாய் கோட்டப்பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 2மணிக்குஅத்தியார் இந்துக் கல்லூரியில் கோட்டக் கல்வி அதிகாரி ஆ. ராஜேந்திரன் தலைமையில் நடைபெறும். (இ-3)

## ஒரே சூலில் 3 குழந்தைகள்

யாழ்ப்பாணம், ஒக். 23

யாழ். போதனா வைத்தியசாலையில் ஒரே சூலில் மூன்று ஆண் குழந்தைகள் பிரசவமாகி உள்ளன.

சங்குவேலியைச் சேர்ந்த சிறிஸ்காந்தராசா ராஜினி தேவி (வயது 36) என்ற பெண்ணே நேற்று நண்பகல் குழந்தைகளைப் பிரசவித்தார்.

இத்தாய்க்கு இது ஆறாவது பிரசவம் ஆகும்.

தாயும், குழந்தைகளும் நலமே இருப்பதாக பிரசவ வார்ட்டில் தெரிவிக்கப்பட்டது. (இ-15)

## நாளை

ஐப்பசி 7

வெள்ளிக்கிழமை

திதி: நவமி
பின் இரவு 4.36 வரை.
நட்சத்திரம்: பூசம்
முற்பகல் 11.31 வரை.
சுபநேரம்: 6.02–7.32
ராகுகாலம்: 10.32–12.02
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## சாயி சிந்தனை.

எப்பொழுதும் சத்தியத்தைத் தேடும் முயற்சியிலேயே ஆழ்ந்திருக்க வேண்டுமே தவிர ஆடைகளையும், தேவைகளையும் பெருக்கிக் கொள்வதிலும், பெற்றுத் திருப்திப் படுத்திக்கொள்வதிலும் நேரத்தை வீணாக்கக் கூடாது. ஓர் ஆசை மற்றோர் ஆசையைத் தூண்டுகிறது. அதனால், மனம் தான் இழந்த சுகங்களைப் பெறத் திரும்பத் திரும்ப விழைகிறது. அதனால் மனதின் சபலத்திற்கு இடம்தராமல் கட்டாயப்படுத்தி மனதைத் திருப்ப வேண்டும். ஒரு முறை அதன் சபலத்துக்கு விட்டுக் கொடுத்தால் பிரார்த்தனை செய்யக்கூட இயலாதபடி மனிதனைக் கெடுத்து விடும் இயல்புள்ளது மனம். குறித்த நேரத்தில், குறிப்பிட்ட இடத்தில், வழக்கமாகப் பிரார்த்தனை செய்ய வேண்டும் என்பது அதற்காகத்தான். இப்படி முயற்சிமேற்கொள்ளும் சாதகர்களைப் பாதுகாத்து அவர்களுக்கு வலிமையையும், விடா முயற்சியையும் அருள அவர்களின் ஆத்மாவே முயலும்.

மனதைக் கட்டுப்படுத்தியவன் நன்மை, தீமை நேரிடும் காலங்களிலும் சம நிலையிலிருப்பான். இன்ப துன்பங்கள் மனதின் நிலை மாற்றமே, மனப் புலன்களோடு தொடர்பு கொள்ளும் போது உடல் பாதிக்கப்படுகிறது. குழப்பமும் மாற்றமும் நிகழ்கின்றன. ஞானி மனதை ஒழுக்க விதிகளுக்குக் கட்டுப்பட வைத்து ஆத்ம தத்துவத்தில் மனதை மூழ்கச் செய்து அமைதி நிலை பெறுகிறான்.

[ஆதாரம்: ஞானவாஹினி]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் நல்லூர் இளநூலகம்.

# வடக்கு - கிழக்குப் பகுதிக்கு மேலும் 1000 ஆசிரியர்கள்

## நவம்பர் 15 முதல் நியமனம்

திருகோணமலை, ஒக். 23
வடக்கு - கிழக்கில் உள்ள பாடசாலைகளுக்கு ஆயிரம் ஆசிரியர்கள் அடுத்த மாதம் 15 ஆம் திகதி முதல் நியமனம் பெறவிருக்கிறார்கள்.

வடக்கு - கிழக்கு மாகாண சபை கல்வியமைச்சுச் செயலாளர் சு. டிவகலாலா மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கில் சகல மாவட்டங்களிலும் நேர்முகப் பரீட்சைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தற்சமயம் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்று வருகின்றன.

இந்த நேர்முகப் பரீட்சை முடிவுகள் கிடைத்ததும் இறுதிப்பட்டியல் கல்விச் சேவை ஆணைக்குழுவுக்கு அனுப்பப்படும்.

அதன் பின்னர் நியமனம் வழங்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் நடத்தப்பட்ட ஆசிரியர் தெரிவுப் போட்டிப் பரீட்சைகளில் உயர்புள்ளி பெற்ற பலர் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படவில்லை எனக் கூறப்படும் முறைப்பாடு தொடர்பாக அவரிடம் கேட்டபோது, நேர்முகப் பரீட்சைக்கு அழைக்க வேண்டியவர்களின் பட்டியலை கல்விச்சேவைக் குழு எமக்கு அனுப்பியது. அதன்படி சம்பந்தப்பட்டவர்களை அழைத்து நேர்முகப் பரீட்சை நடத்துகின்றோம். நேர்முகப் பரீட்சை முடிந்ததும், விவரங்களை கல்விச் சேவைக் குழுவுக்கு அனுப்புவோம். அவர்கள் நியமனம் வழங்குவார்கள் — என்றார். (இ 3)

## கலைமாணி பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 23
பேராதனைப் பல்கலைக்கழக பொதுக்கலைமாணி(பி. ஏ.) பரீட்சை எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறாது என்று பேராதனைப்பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ளது என்று ஈ. பி. டி. பி. அமைப்பு தெரிவித்துள்ளது.

கடந்தவருடம் நடைபெற்ற பொதுக்கலைமாணி (பி.ஏ.), கலை முதல் தேர்வு (ஜி. ஏ. கியூ) முடிவுகள் இன்னும் வெளியிடப்படாத காரணத்தால் பரீட்சை பின்போடப்படுவதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)




நாடக அரங்கக் கல்லூரி

கருத்தரங்குத் தொடர்-5

நாடகத்தில் லயானுபவம்

அனுபூதிமான்:
திரு. ஏ. ரி. பொன்னுத்துரை

25 - 10 - 97 சனி 3. 30 மணி

யா. | கந்தர்மடம்
சைவப்பிரகாச வித்தியாலயம்

ஆர்வமுள்ளவர்களை
கலந்து கொள்ளுமாறு
வேண்டுகின்றோம்.

இயக்குநர்.

(சி/1840)



எமது புதிய வெளியீடு

மம்முட்டி ..
ஷோபனா...
நடித்த
பாசிலின்
ஒரு பூ வசந்தம்
விடிவெள்ளி
சஸ்பென்ஸ்
ஒறிஜினல் பிரதிகள்
அபிமன்யு
நானும் ஒரு
இந்தியன்
வீடியோ விமல்
யாழ்ப்பாணம். [50719)


## நகரில் தீபாவளி கலகலப்பு!

திருநெல்வேலி ஒக். 23
யாழ். நகரில் தீபாவளிப் பண்டிகைக்கான உடு புடைவை விற்பனை தற்போது களைகட்ட ஆரம்பித்துள்ளது. புடைவைக் கடைகளிலும், நடை பாதை வீதி ஓரக் கடைகளிலும் புத்தாடைவிற்பனை அமோகமாக நடைபெற்று வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. , புத்தாடைகள் வாங்குவதற்காக நகருக்கு பெரும் எண்ணிக்கையிலான மக்கள் வந்த வண்ணமுள்ளனர். முக்கிய வீதிகளில் சன நெரிசலும், போக்குவரத்து நெருக்கடியும் காணப்படுகின்றன.

இதேவேளை இதுவரை காலமும் மூடப்பட்டிருந்த காங்கேசன்துறை வீதியிலிருந்து பெரிய கடைக்குச் செல்லும் பாதை இவ்வாரம் முட்கம்பித் தடை அகற்றப்பட்டு மக்கள் போக்குவரத்து செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. காலை ஏழுமணி தொடக்கம் மாலை 5 மணி வரை இப் பாதை வழியாக மக்கள் போய் வருவதற்கு பாதுகாப்புப் படையினர் அனுமதித்துள்ளனர்.

## பொல் பொட் பேட்டி

ஹொங்கொங், ஒக். 23
கம்போடியாவின் ''கெமரூச்'' இயக்கத்தின் முன்னாள் தலைவர் சர்வாதிகாரி பொல் பொட்டின் பிரத்தியேகப் பேட்டி ஒன்றை ஹொங்கொங்கில் வெளியாகும் பத்திரிகை ஒன்று இவ்வாரம் பிரசுரிக்கவுள்ளது.

சமகால விடயங்களை வெளியிடும் இப்பத்திரிகையின் செய்தியாளர் ஒருவர் பொல் பொட்டை பேட்டி கண்டுள்ளார். (ஐ)

## வன்னிப்பகுதிக்கு 700 தொன் மா

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள உணவுத் தட்டுப்பாட்டை நிவர்த்திக்கும் வகையில் 700 மெற்றிக் தொன் மா கொழும்பில் இருந்து நேற்று அனுப்பப்பட்டுள்ளது.

வவுனியாவில் இருந்து முல்லைத்தீவு மாவட்டத்துக்கு செல்லும் பாதைகளில் இராணுவ நடவடிக்கைகள் இடம்பெறுவதால் அங்கு உணவுப் பொருள்கள் கடந்த இரு வாரங்களாக அனுப்பப்படவில்லை.

இதனால் அப்பகுதி மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்களை நீக்கும் வகையில் இந்த மா அனுப்பப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## முல்லைத்தீவை..

(முதலாம் பக்கத் தொடர்)
ஹெலி மூலம் உணவு போடப்படுவதாகவும் — வவுனியாவுக்கு கிடைத்த ஊர்ஜிதம் அற்ற தகவல்கள் தெரிவித்தன.

ஒட்டுசுட்டானைப் படையினர் தம்வசம் கொண்டு வந்துள்ளதாக மற்றொரு தகவல் தெரிவித்தது. (இ-3)

## ஜே.வி.பி...

(முதலாம் பக்கத் தொடர்)
முயற்சிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஏனைய பிரதேசங்களில் வசிக்கும் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படவில்லை.

வடக்கு – கிழக்கு இணைப்பு விடயத்தில் திருமலை — மட்டக்களப்பு மாவட்டங்களில் மட்டும் சர்வஜன வாக்கெடுப்பு என்ற தீர்மானம் ஜனநாயக விரோத செயல். இவ் வாக்கெடுப்பு கிழக்கு மாகாணம் முழுவதும் நடைபெற வேண்டும். தென்கிழக்கு அலகு மற்றுமொரு புதிய பிரச்சினையை உருவாக்கப் போகிறது. நாடு சுமுக நிலைக்கு வர முன்பு இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் அர்த்தமில்லை. இந் நிலையில் அரசமைப்பு சீர்திருத்த யோசனையை எமது கட்சி நிராகரிக்கின்றது.

இப்படி அவர் கூறினார். (இ-21)

## பிராந்திய அலகு...

(முதலாம் பக்கத் தொடர்)
அலண்ட்டில், மலேஷியாவின் சபா மற்றும் சரவாக்கில் அதிகாரப்பகிர்வு அந்த அந்தப் பகுதி மக்களுக்கான தீர்வாக அமைந்தது. அதேபோல் வடக்கு–கிழக்கு தமிழ் பேசும் மக்களின் தீர்வாக அதிகாரப் பகிர்வு அமையவேண்டும்.

★ பல் இன, பல்மொழி, பல பண்பாடுகள் கொண்ட நாடு என்பதை அங்கீகரிக்கவில்லை.

★ வடக்கு - கிழக்கு தொடர்ந்து இணைக்கப்பட்டிருக்கவேண்டும்.

★ பிராந்திய அரசமைப்பு கவுன்ஸில் தொடர்பான பிரச்சினை தீர்க்கப்படவில்லை.

★ பிராந்திய அரசைக் கலைக்க ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப்படலாம்.

★ பொலீஸ் அதிகாரம் சீராக்கப்படவில்லை.

★ நாடாளுமன்றத்தில் 2 ஆவது சபை பற்றி கூறப்படவில்லை.

★ ஜனாதிபதியின் இனத்தைச் சேராத ஒருவர் உப-ஜனாதிபதியாக வருவது உறுதிப்படுத்தப்படவில்லை.

★ புத்த சமயத்துக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

★ குற்றங்களை விசாரிப்பதில் பிரதேச பொலீசாருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

★ தேசிய இராணுவம், பொலீஸில் இனரீதியில் ஆள்களைச் சேர்க்க வேண்டும் என்பது உறுதிப்படுத்தப்படவில்லை.

நாம் தெரிவித்துள்ள குறைபாடுகள், அரசின் யோசனைகள் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படமுன் ஆராயப்படவேண்டும்.

அப்படி செய்தால், எவரைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றோமோ, எவருக்காக ஆயுதம் ஏந்திப்போராடுகின்றோமோ அந்த மக்களிடம் அரசாங்கம் சரியான பாதையில் செல்கிறது என்று கூற முடியும்.

இப்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் காசோலை மூலம் நிதி மோசடி

மட்டக்களப்பு, ஒக். 23
மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் போலி ஒப்பமிட்டு காசோலை மூலம் நிதி மோசடி செய்யப்பட்டுள்ளது.

வைத்தியசாலை காசோலை புத்தகத்திலிருந்து 3 காசோலைகள் காணாமல் போனதை அவதானித்த கணக்காளர் வங்கியுடன் தொடர்பு கொண்டபோது நிதி மோசடி கண்டுபிடிக்கப்பட்டது.

மேற்படி காசோலைகளில் ஒன்று மட்டும் கணக்காளர், நிதி உதவியாளர் ஆகியோரின் போலி ஒப்பமிடப்பட்டு மாற்றப்பட்டுள்ளது.

இம்மோசடி தொடர்பாக காசாளர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதேநேரம் ஆரையம்பதி பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற ரூபா 24 ஆயிரம் காசோலை மோசடி தொடர்பாக எழுதுவினைஞரொருவர் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார். (இ-21)

## கொட்டடி மீனாட்சிபுரத்தில் மக்கள் குடியமர்த்தப்படுவர்

### அங்கு கொட்டகைகள் அமைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 23
யாழ்ப்பாணம் கொட்டடி மீனாட்சிபுரத்தைச் சேர்ந்த மக்கள் மீண்டும் அவர்களது சொந்த இடத்தில் குடியமர்த்தப்படவுள்ளனர்.

இவர்களை சொந்த இடத்தில் குடியமர்த்த வசதியாக அப்பகுதியில் தற்காலிக கொட்டகைகள் அமைக்கப்படவுள்ளதாக யாழ். பிரதேச செயலர் து. வைத்திலிங்கம் தெரிவித்தார்.

இவர்கள் தற்சமயம் கொட்டடிப் பகுதியில் உள்ள கூட்டுறவுத் திணைக்களக் கடைத் தொகுதியில் தங்கியுள்ளனர். (ஐ-ரி)

## முதியோருக்கு அன்பளிப்பு

சண்டிலிப்பாய், ஒக். 23
மானிப்பாய் லயன்ஸ் கழகம் அண்மையில் நடத்திய சர்வதேச முதியோர் தின விழாவில் 22 முதியவர்கள் அன்பளிப்புகள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். கழகத் தலைவர் லயன். செ. ஞானராஜ் தலைமையில் மானிப்பாய் ஆலடிச்சந்தியிலுள்ள கழக செயலகத்தில் நடைபெற்ற இவ் விழாவில் லயன்ஸ் கழகங்களின் வட பிராந்திய தலைவர் லயன். வி. தில்லைநாதன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். ஒவ்வொரு முதியவருக்கும் படுக்கை விரிப்பு, உடுப்புகள், சமையற் பாத்திரங்கள் என்பன அன்பளிப்புச் செய்யப்பட்டன. இதேவேளை கைதடியிலுள்ள முதியோர் இல்லத்திற்கும் கழகத்தினால் சவர்க்காரங்கள் வழங்கப்பட்டன. (ஐ-135)

## முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்)
பட்டது.

வவுனியா பதில் நீதிவான் எம். சிற்றம்பலம் இவரது மரண விசாரணையை நடத்தினார்.

இறந்தவரின் மனைவி கவிதா, டாக்டர் ஏ. கேதீஸ்வரன் ஆகியோர் சாட்சியம் அளித்தனர்.

கொலை எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. (இ-3)

## சமய சந்நிதியில்

சாவகச்சேரி கச்சாய் வீதி நாவலடிப் பிள்ளையார் கோயிலில் நடைபெற்றுவரும் விசேட நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை சப்பச்சி மாவடிப் பிள்ளையார் கோயில் பிரார்த்தனைக் குழுவினரின் பஜனைப் பாடல்கள் நிகழ்ச்சியும் சமயச் சொற்பொழிவும் இடம்பெவுள்ளன. (ஐ-117)

★ ★ ★

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை நடத்தி வரும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை ''ஆறுமுகமான பொருள்'' எனும் தலைப்பில் கிராம சேவையாளர் சி. சிவபாலசிங்கம் சொற்பொழிவாற்றுவார்.

சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் இச் சொற்பொழிவுக்கான அறிமுகவுரையை ந.சேகர் நிகழ்த்துவார். (ஐ-173)

## இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்)
றும் — இந்தியத் தலைவர்களுடன் நடத்திய பேச்சுக்களில் ரணில் தெரிவித்ததாக செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன. தனிப்பட்ட விஜயத்தை மேற்கொண்டு ரணில் இந்தியா சென்றிருந்தபோதும், அவருக்கு இந்தியாவில் அரச பாதுகாப்பு வழங்கப்படுகின்றது.

அவருடைய ஹோட்டல் மற்றும் செலவுகளை இந்தியா வழங்கி வருகிறது.

இதற்கிடையில் இலங்கை நாடாளுமன்றத்தில் நாளை பிரேரணை சமர்ப்பிக்கப்பட்ட பின்பும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு மீண்டும் ஒரு தடவை கூடும் என்றும்—

பிரேரணை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபின் ஏற்படும் சந்தேகங்களுக்கு தீர்வு காணுவதே தெரிவுக் குழுவை மீண்டும் கூட்டுவதற்கான நோக்கம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கத்தின் யோசனைகள் தொடர்பாக சில அரசியல் கட்சிகள் முழுமையான உடன்பாட்டுக்கு இன்னும் வரவில்லை என்று நீதி, அரசமைப்பு விவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (இ-3-5-9)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23 10 - 97 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org